*World ChristianFellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *சபை மற்றும் அதன் நோக்கம் - 05*
# *ஒரு தலைவரின் நிலை – பாலூட்டும் தாய்*

***1 தெசலோனிக்கேயர் 2:7-12, உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, 8. நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். 9. சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். 10. விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென் பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி. 11. மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, 12. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.***

*புதிய ஏற்பாடு ஒரு ஆவிக்குரிய தலைவன் எப்படி இருக்க வேண்டும் என பல உருவகங்களை நமக்கு தருகிறது.*

***1 பேதுரு 5:1-4***, *ஆவிக்குரிய தலைவர்கள் மேய்ப்பர்கள் என அழைக்கப்படுகிறார்கள்,*

***1 கொரிந்தியர் 4:1-2***, *ஆவிக்குரிய தலைவர்கள் உக்கிராணக்காரர்கள் என அழைக்கப்படுகிறார்கள்,*

***1 தீமோத்தேயு** 2:7*, *ஆவிக்குரிய தலைவர்கள் இராஜாவின் வார்த்தையை அப்படியே அறிவிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.*

***2 தீமோத்தேயு** 2:2*, *ஆவிக்குரிய தலைவர்கள் போதிப்பவர்களாய் இருக்க வேண்டும்.*

*ஆவிக்குரிய தலைவர்கள்*

- *மேய்ப்பர்கள்,*
- *உக்கிராணக்காரர்கள்,*
- *தூதர்,*
- *போதிப்பவர்கள் மற்றும்*
- *அடிமை*

*இங்கு அப்போஸ்தலன் பவுல் இதை அடுத்த நிலைக்கு கொண்டு செல்கிறார்.*

## ***பாலூட்டும் தாய் மற்றும் தந்தை.***

### ***தாய்: மென்மையான கவனிப்பு***

***1 தெசலோனிக்கேயர் 2:7, உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல,***

***கலாத்தியர் 4:19,என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்.***

***தந்தை: வலுவான அதிகாரம்***

***1 தெசலோனிக்கேயர் 2:12, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். (in English V11)***
***1 கொரிந்தியர் 4:15, கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தில் நான் உங்களைப் பெற்றேன்.***

***1 தெசலோனிக்கேயர் 2:7-9,***

*பவுல் மனித உலகிலே மிகவும் நெருக்கமான, மென்மையான, நேசத்துக்குரிய, மனித உறவைத் தேர்ந்தெடுக்கிறார். இந்த உறவோடு பொருந்த எதுவும் இல்லை.*

*ஆம், ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவு போல் ஒரு மென்மையான,நெருக்கமான ஒரு உறவு மனித வாழ்வில் வேறு இல்லவே இல்லை.*

*இங்கு சொல்லப்பட்டுள்ள பதம் ஒரு பால் கொடுக்கும் தாயை தான் குறிக்கிறது, "தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல" என்கிற சொற்றொடர் மூலம் அறியலாம்.ஒரு குழந்தையை தத்தெடுப்பது போல அல்ல.*

*பால் கொடுக்கும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளிடம் மிகுந்த பாசம் செலுத்துகிறார்கள். ஒரு தாய், அப்படிப்பட்ட ஒரு பாசத்தை அந்த குழந்தைக்கு தராமலும், பால் கொடுப்பதை ஒரு அற்புதமான நிகழ்வாக நினைவில் கொள்ளாவிட்டால், தேவன் ஒரு தாயிற்கு இயற்கையாக வைத்துள்ள அந்த நேசத்தை அந்த குழந்தை இழந்து விட்டது என்று கூற வேண்டும்.*

*கைகளில் ஒரு சிறு குழந்தையுடன் இருக்கும் ஒரு தாய்க்கு பாசம் உண்டு. அது சாதாரணமானது மற்றும் மிகவும் இயற்கையானது. அது தேவனால் கொடுக்கப்பட்டது,அது தான் தாயை பால் கொடுக்கவும்,காக்கவும் தூண்டுகிறது.*

*எல்லா தாய்மார்களுக்கும் தெரியும் அதனால் அவர்கள் போற்றப்படுவதில்லை,இது ஒன்னும் சாகசம் இல்லை விருதுகள் கொடுக்க என்று.*

*அவர்களுக்கு கிடைப்பதெல்லாம் அழுகும் குழந்தைகளும்,அழுக்கான டயபர்,தூக்கமில்லை இரவுகள், ஒழுகும் மூக்கு, மற்றும் உடல் முடியாமை. இது மிகவும் கடினமானது, தொடர்கதை போலானது, முடிவில்லாதது மற்றும் கவனிக்க வேண்டியது.*

*பவுல் சொல்லுகிறார், "தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல்".*

*முதலாவது பவுல் தேவனுடைய சுவிசேஷத்தை கொடுக்கிறார்.*

***கொடுப்பது**: நீங்கள் அவர்களுக்கு சுவிசேஷத்தை கொடுத்தீர்கள் அதுமட்டுமில்லாமல் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.*

*நம்முடைய விசுவாசத்தை பகிர்கிறோம் என்று சொல்லலாம். பவுல் சொல்லுகிறார், பாருங்கள் உங்கள் மேல் அதீத அன்பு கொண்டு தொடர்ந்து தேவனுடைய சுவிசேஷத்தை நன்றாக கொடுத்து வருகிறேன் என்று.*
*பவுல் சொல்லுகிறார் உங்களை இரட்சிக்கும் சுவிசேஷத்தை மட்டும் உங்களுக்கு பிரசங்கிக்கவில்லை அது உங்களை பரிசுத்த படுத்துகிறதாய் உள்ளது என்று. அதற்கும் மேலாக உங்களுக்காக எங்களுடைய வாழ்க்கையையும் ஆத்துமாவையும் கொடுக்கிறோம் அதாவது பூமியில் எங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்காகவே ,எங்களையே அர்பணிக்கிறோம் என்று அர்த்தம்!*

## ***ஒரு தாய் என்ன செய்வார்கள்?***

*ஒரு தாய் என்பவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் தன்னுடைய குழைந்தைக்காக உண்மையாய் அர்ப்பணித்து வாழ்பவர்.*

- *தியாக மனப்பான்மை கொண்டவர்.*
- *முழுவதும் சுயநலம் அற்றவர்.*
- *உயர்ந்த பண்பு உடையவர்.*
- *தன் வாழ்க்கையில் முற்றும் நிறைந்தவர்.*
- *அந்த வாழ்க்கை அவரின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறது.*

*நீங்கள் குழந்தையை பெற்றுவிட்டு உங்கள் சுயவாழ்க்கையை வாழ்ந்து விட்டு தாயை குறித்த தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாது.*

*குழந்தை உங்கள் வாழ்க்கையை உறிஞ்சுகிறது.*

*நீங்கள் அதற்கு*

- ✓ *உணவு கொடுக்க வேண்டும்,*
- ✓ *அன்பு,*
- ✓ *உடை மாற்ற வேண்டும்,*
- ✓ *தூங்க வைக்க வேண்டும்,*
- ✓ *எழுப்ப வேண்டும்,*
- ✓ *உடை உடுத்த வேண்டும் மற்றும்*
- ✓ *அதன் எல்லா தேவையையும் சந்திக்க வேண்டும்.*

*அதை தான் தேவனும் எதிர்பார்த்தார்.*
*உனக்காக என் வாழ்க்கையையே தாராளமாக தருகிறேன், ஏனென்றால் நான் உன்னை நேசிக்கிறேன்!*

***2 கொரிந்தியர் 12:14-15, இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை; நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்: பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டும்.15. ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்***

*சுயநலம் இல்லாமல் அன்பை தியாகமாக செலவழிக்கும் காரியம் இது!*

*ஒரு தாயின் அன்பை தான் பவுல் சபையின் மேல் கொண்டார்.*

- ✓ *நீங்கள் எங்களுக்கு மிகவும் அன்பாக இருந்தீர்கள்.*
- ✓ *நீங்கள் மதிப்புடையவர்கள்.*

- ✓ *நீங்கள் தகுதியானவர்.*
- ✓ *நீங்கள் எனக்கு விலைமதிப்பற்றவர்.*
- ✓ *நான் உங்களை வித்யாசமாக நடத்த முடியாது.*

*தேவனின் மக்கள் மீது அதீத அன்பு உள்ளது.*

***வ 8-9**,*

*ஒரு தாயை உருவகப்படுத்த வேண்டுமானால், இரவு பகல் பார்க்காமல் வேலை செய்து,குழந்தைக்கு தேவையானதை கொடுத்து வாழும் ஒரு உழைப்பாளி அதை அவர்கள் ஒரு பாரமாக பார்க்கவில்லை.*

***2 கொரிந்தியர் 6:10, துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர் களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணு கிறோம்***

*நம்முடைய வாழ்க்கை கீழ்கண்டவற்றால் குறிப்பிடப்படுகிறது*

- ➢ *ஏழ்மை,*
- ➢ *அவமரியாதை,*
- ➢ *மிகவும் தாழ்வான,*
- ➢ *பிரச்சனைகள் மற்றும்*
- ➢ *பாடுகள்.*

*இவை எல்லாவற்றிலும் நாம் எடுத்துக்கொள்கிறவர்களாய் அல்லாமல் கொடுக்கிறவர்களாய் இருக்கிறோம்.*

***ஒரு தாய்க்கு என்ன வேண்டும்?***
***ஒரு குழந்தை தாய்க்கு என்ன தர முடியும்?***

*கண்டிப்பாக ஒன்றுமே இல்லை.*

***ஒரு குழந்தை தனக்கு பால் கொடுத்து வளர்த்த அன்னைக்கு என்ன விலை கொடுக்க முடியும்?***

***ஒரு குழந்தை தன் மேல் அதீத அன்பு காட்டிய அன்னைக்கு என்ன விலை கொடுக்க முடியும்?***

***குழந்தையை கையில் ஏந்தி கொஞ்சி அன்பு காட்ட ஏங்கும் அந்த தாயின் பாசத்திற்கு அந்த குழந்தை என்ன விலை கொடுக்க முடியும்?***

*அதற்கு விலையே இல்லை.*
*அந்த குழந்தைக்கு கொடுக்க எதுவும் இல்லை, கொடுக்கவும் முடியாது.*

*என்னுடைய ஆவிக்குரிய குழந்தைகளான உங்களை ஊட்டுவிக்க எங்களால் முடிந்த வரையில் பிரயாசித்தோம்.*

*உங்களுக்கு*

- ✓ *மென்மை,*
- ✓ *நெருக்கம்,*
- ✓ *பாலூட்டி மற்றும்*
- ✓ *அக்கறை காட்டி வந்தோம்.*

***ஏன்?***

*நீங்கள் பாரத்தை சுமக்க கூடாது என்பதற்காக ஒரு தாய் போல நாங்கள் அந்த பாரங்களையெல்லாம் சுமந்தோம்.*

*இப்படிதான் பவுலும் அவர் நண்பர்களும் தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள்.*

*உங்களுக்கு பிரசங்கித்த பெரிதான சுவிசேஷமானது எங்களுக்கு பாரமானதாக இருக்க வில்லை. மற்றும் எங்கள் கைகளால் இரவும் பகலும் கடினப்பட்டு உழைத்தோம் உங்களுக்கு சத்தான சத்தியத்தை கொடுத்துக்கொண்டே இருப்பதற்காக.*

*ஒரு தாயை போன்ற பெரிய தியாகத்தை செய்தோம். அது உங்கள் வாழ்க்கையை மாற்றியது.*

*பவுல் ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் இது எப்படி இருக்கும் என்ன விளக்குகிறார். ஒரு தாயை போல நேரம் பார்க்காமல் அக்கறை செலுத்துவது தான் ஒரு ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்கு முக்கியம்.*

*ஒரு தலைவருக்கு அவருடைய இருதயம் ஒரு தாய் மற்றும் தந்தை போல இருக்க வேண்டும், தேவனுடைய மக்கள் மேல் அதிகாரம் செலுத்துவதில் மாத்திரம் அல்ல ஒரு நெருக்கமான உறவு, எப்பொழுதும் சந்திக்க கிடைப்பதாக, மென்மையாக, அன்பாக, அனுதாபம் கொண்டு மற்றும் கருணையுடன் இருக்க வேண்டும்.*

## ***முடிவுரை:***

***1 தெசலோனிக்கேயர் அதிகாரம் 2,***
*முதல் வசனத்தில் சொல்லுகிறார்." நீங்களே அறிந்திருக்கிறீர்கள்''.*

*இரண்டாம் வசனத்தில்." உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி,''*

*ஐந்தாம் வசனத்தில் " உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி"*
*ஒன்பதாம் வசனத்தில்." உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்"*
*பத்தாம் வசனத்தில்." நீங்களும் சாட்சி,"*
*12ம் வசனத்தில்." அறிந்திருக்கிறீர்கள்."*

*அவர்களை பற்றி பவுலுக்கு என்ன தெரியும் என்று ஒருமுறை ஞாபகப்படுத்துகிறார்.*
*அவர் அவர்களை நேரில் சந்தித்து அவர்களோடு இருந்தார்.*
*அவர்களுக்கு இரண்டாம் சாட்சி வேண்டுவது இல்லை.*
*அவர்களின் எதிர்ப்பாளர்களுக்கு அவர்கள் செவி கொடுக்க வேண்டியது இல்லை.*
*பவுலின் புகழ்ச்சிக்கு மற்றும் தேவனுக்காக அவர் செய்த காரியங்களுக்கு அவர்களே உயிருள்ள சாட்சிகளாய் இருக்கிறார்கள்.*

*நீங்கள் ஊழியம் செய்யும் மக்களுக்கு முன்பாக இப்படிப்பட்ட வாழ்க்கையை உங்களால் வாழ்ந்து காட்ட முடியுமா?*